விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 7 ரபி-அவ். 28 இதழ் 308
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-12-84

யாழ். நகரில் நேற்று

# 500 அன்னையர் போர்க்கொடி!

(ஏ. வி. மாணிக்கம்)

திருநெல்வேலியில் இளம் பெண் பலாத்காரம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக் காலை யாழ். நகரில் சுமார் 500 பெண்கள் ஊர்வலமாக யாழ். செயலகத்துக்குச் சென்று யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

யாழ். றிம்மர் மண்டபத்துக்கு முன்னிலையிலிருந்து அன்னையர் முன்னணி ஊர்வலம் சுலோக அட்டைகளுடன் புறப்பட்டது

வீதி இருமருங்கிலும் பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர்.

சுலோக அட்டைகளில் "எங்களின் கண்ணீர் எரிமலையாகும்", 'தாய்க் குலத்தினரைத் தனிமையில் சோதனையிடாதீர்' அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிக்காதீர்' போன்ற பல சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் வீதி ஓரமாக மும்மூன்று பேராக வரிசையாகச் சென்ற

(4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

சென்னையில் நேற்று இந்தியப் பிரதமர் கூறினர்

# இலங்கை தமிழர்மீது வன்முறை, கொலைகள்!

[சென்னை]

"இலங்கைத் தமிழர்கள் வன்முறைகளுக்கும் கொலைகளுக்குமுள்ளாகின்றனர். இதனல் இன்னல்படும் இலங்கைத் தமிழர்கள் துயர்கண்டு இந்திய நாடே கவலைகொள்கிறது" என்று நேற்று சென்னை திருவள்ளூரில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி கூறினர்.

நேற்று சென்னையில் பல கூட்டங்களில் ரஜீவ் உரையாற்றினர்.

அவர் பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கையில் வன்முறையும் கொலைகளும் நடத்தப்பட்டதால் 30 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தமிழ்நாடு வந்துள்ளனர் நிச்சயமாக இது நம்மைப் பாதிக்கிறது. இலங்கையில் பாதிக்கப்பட்டோரில் இந்திய இனத்து மக்களும்இருக்கிறார்கள். இதுவும் நம்மைக்கவலையுறச்செய்கின்றது.

"இலங்கையில் தமிழர்கள் இன்னல்களுக்கு இலக்காவது குறித்து தமிழ்நாடு மட்டுமல்ல; இந்திய நாடே பெருங்கவலை கொண்டிருக்கிறது.

"இராமேஸ்வரம் கடற் பிராந்தியத்தில் மீன்பிடிக்கச் செல்வோரை இலங்கைக் கடற்படையினர் சுடாமல் பாதுகாக்கவும், நம் நாட்டு மீனவர் நலனைக் காக்கவும் அந்தப் பகுதியில் நமது கடற்படைக் கப்பல்கள் ரோந்துசுற்றி வருகின்றன."

• விமானப்படை விசேட விமானம் மூலம் நேற்றுக் காலை இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்துப் பேசுவதற்காக திரு. ரஜீவ் சென்னை வந்தார்.

யாழ்.நகரில் 2பொலிஸ்இன்ஸ்பெக்டர்கள்

# கடத்தப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ்நிலைய இரு இன்ஸ்பெக்டர்கள் இனந்தெரியாத இளைஞர்களினல் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டனர். யாழ். ரயில்நிலையத்திலிருந்து நேற்றுநண் பகல் இவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

குருநாகலைச் சேர்ந்த ரெஜேன் சில்வா, நாணயக்கார என்ற இந்த இருவரும் இன்ரசிற்றி ரயிலில் செல்வதற்காக ரயில் நிலையம் வந்தபோதே இச்சம்பவம் நடந்தது.

ஆகாயத்தை நோக்கிச் சுட்டுவிட்டு, இருவரையும் கட்டிப் பிடித்துத் தூககிச் சாமான்கள் ஏற்றும் வான் ஒன்றுக்குள் போட்டுக் கொண்டு மின்னல் வேகத்தில் மறைந்ததாககூறப்படுகிறது.

இந்த இருவரையும் விடுவிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு.அ. அமிர்தலிங்கமும், தலைவர் எம். சிவசிதம்பரமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பொலிஸ் மா அதிபரும் இதுபோன்ற வேண்டுகோளை விடுத்துள்ளர்.

இவர்கள் இரகசியப் பொலிசார் அல்லவென்றும் அவர்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களே என்றும், கிறிஸ்தவர்களான அவ்விருவரும் குடும்பஸ்தர்களாக இருப்பதால் விடுதலை செய்யும்படியும் யாழ். பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரி ரஞ்சித் டி சில்வா கேட்டுக் கொண்டிருக்கிறர். (மா)

துப்பாக்கிமுனையில் அபகரித்த

# 2000 படிவங்கள் தீவைக்கப்பட்டன!

(யாழ்ப்பாணம்)

உணவுக் கட்டுப்பாட்டுக் குடியிருப்பாளர் உறுதி உரைப் படிவங்கள் யாழ். உதவி அரசாங்க அதிபர் காரியாலத்திலிருந்து இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் அபகரிக்கப்பட்டுத் தீவைக்கப் பட்டுள்ளன

நாவாந்துறை விசேஷசேவை அலுவலரின் அலுவலகத்தில் நிரப்பப்பட்ட மேற்குறிப்பிட்ட படிவங்களும் துப்பாக்கி

[4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

# மூதூரில்இருவர்சுட்டு கொலை

(கொழும்பு)

ராணுவத்தினரும், கடற்படையினரும் திருகோணமலை மாவட்டத்தில் இணைந்து மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில், மூதூரில் மறைந்து இருந்து நடத்திய தாக்குதலில் அங்குள்ள தீவிரவாதிகள் குழுவின் தலைவர் குண்டன் பாலனும், அவரது உதவியாளருமான பாலச்சந்திரனும் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பு ஒன்று தெரிவித்தது.

சர்வகட்சி மாநாடுபற்றி ஜனதிபதி

# மக்களே முடிவு எடுப்பர்!

[இ கந்தசாமி]

"முற்றுப்பெற்ற சர்வகட்சி மாநாட்டு நகல் சட்டம் சம்பந்தமான எந்த ஒரு முடிவையும் மக்களே தீர்மானிக்க வேண்டும். இதன் பின்னரே அரசு ஒரு தீர்மானத்துக்கு வந்து, பாராளுமன்றத்தில்சட்டத்தைச் சமர்ப்பிக்கும்" என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுத் தெரிவித்துள்ளார். இத்தகவலை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி மாநாட்டு முடிவில் நேற்றுச் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

சர்வகட்சி மாநாடு நேற்றுக் காலை ஜனதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கூடியது.

நேற்றைய மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கலந்துகொண்டது.

ஓராண்டுக்கு முன்னர் ஆரம்பமான இந்த மாநாடு நேற்றுடன் முற்றுப்பெற்ற பின்னர், மாநாட்டுப் பேச்சாளரான தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிக்கையொன்றை விடுத்தார்.

தூதுக் குழுக்கள் தமது கருத்துக்களை எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ளலாம். இந்த யோசனைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டும் என்றும், உயர்நீதிமன்றம் அதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் ஜனதிபதி தெரிவித்துள்ளார். சிலவேளை பொது அபிப்பிராய வாக்கெடுப்பு பொதுதேர்தலை நடத்துவது அவசியமாக

(4-ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

## புத்தாண்டில் தீயணைக்கும் படை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கான தீயணைக்கும் படை இம் மாதமுற்பகுதியில்இங்கு அனுப்பப்பட்டுள்ளது. புது வருடத்தில் இதுவந்துசேரும்.

[4-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க]

## 600 தமிழ் குடும்பங்கள் பாதிப்பு

[கொழும்பு]

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமுழமுனையில் 600 தமிழ் குடும்பங்கள் ராணுவத்தின் நிர்ப்பந்தம் தாங்காமல் முள்ளியவளைப் பகுதியில் ஆடு, மாடு, கோழிகளுடன் தஞ்சமடைந்துள்ளதாக நேற்று திரு. அமிர்தலிங்கம் ஜனதிபதியைச் சந்தித்துப் புகார் தெரிவித்தார்.

## கைதான இளைஞர்களை பெற்றோர் பார்க்கலாம்

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்டு பலாலி ராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட டிருக்கும் இளைஞர்களை காலை நேரததில் 20 பெற்றோரும், மதியானத்தின் பின் 20 பெற்றோரும் சென்று பார்க்கவும், அவர்களுக்கு மாற்று உடை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

யாழ். அரச அதிபரும், மாவட்டச் செயலாளருமான திரு. எம். பஞ்சலிங்கம் யாழ். மாவட்ட ராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனவிரத்னவுடன தொடர்பு கொண்டு இந்தஏற்பாட்டினைச் செய்துள்ளார்

கைதுசெய்யப்பட்டவர்களைப் பார்க்க விரும்பும் பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் யாழ். அரச செயலகத்தில் வழங்கப்படும் கடிதத்தினைப் பெற்றே செல்லவேண்டும் என தெரியவருகின்றது.

## இன்று கூட்டணி அறிக்கை

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு சம்பந்தமாக தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று தனது அறிக்கையை வெளியிடும் என்று அமிர்தலிங்கம் நேற்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக

# விரிவுரையாளர், மாணவர் நேற்று கைது!

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும், சுமார் 20 மாணவர்களும் ராணுவத்தினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ் பல்கலைக்கழக விடுதிக்குள் நுழைந்த ராணுவத்தினர் இவர்களைக் கைதுசெய்தனர்,

விரிவுரையாளர் திரு ரீ. மகேஸ்வரனும் இந்த மாணவர்களும் ராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இம்மாணவர்கள் அனைவரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் விசேட பரீட்சைக்குத் தோற்றவிருந்தவர்களாவர்.

## 'நான் சோதிடனல்ல!'

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டு நகல்சட்டமூலத்தைநிறைவேற்ற எவ்வளவு காலம் எடுக்கும் என்று நிருபர் ஒருவர் அமைச்சர் லலித்திடம் கேட்டபோது, "பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். நான் சோதிடனல்ல" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

5 மாத அல்சேசன் [கடுவன்] விற்பனைக்குண்டு. முகவரி 117, சிவப்பிரகாசம் ரோட், வண்ணார்பண்ணை. 1049

நல்லின [டோமன் பிஞ்சர்] அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 29/17 தேவாலய ஒழுங்கை, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 1041

திறம் மரத்தால் செய்யப்பட்ட உறுதியான மாடிப்படி ஏணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை வண்ணார்பண்ணை. 1026

துர்க்கையம்மன், பிரபல கல்லூரிகள் ஆகியவற்றிக்குச் சமீபமாக நல்ல சுற்றுடலில் அமைந்துள்ள 10 பரப்புக் காணி தெல்லிப்பளையில் விற்பனைக்குண்டு தரகர்களின்றித் தொடர்பு கொள்ளலாம். திருமதி சிவக்கொழுந்து. முருகேசு, நவற்கிரி, புத்தூர். 1015

## வாடகைக்கு

அரியாலையில் மாம்பழம் சந்திக் கருகாமையில் கண்டிவீதியில் மின்சாரம், மோட்டர் உட்பட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உள்ளது. தொடர்பு கொள்க. க. பாலேந்திரன், 444(174) கண்டி வீதி அரியாலை யாழ்ப்பாணம். 1022

புதிய வீடு 4படுக்கை அறைகள் தற்காலிக வசதிகளுடன் குளி அறைகள் குசினி மாபிள் நிலம் மின் விசிறி, கராஜ் விற்பனவுக்குண்டு. 187,3ம்குறுக்கு வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 22029. 1020

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

புலோலி தெற்கு மரண சாதனமின்றிக் காலஞ்சென்ற கந்தையா மாணிக்கம் பெண் செல்லம்மாவின் சொத்து விடயமாக

—இறந்தவர்

1. வேலாயுதம் ஜெயசிங்கம்
2. பெண் சிவஞானவதி

இருவரும் புலோலி தெற்கு

—மனுதாரர்கள்

வழ. இல; T/1190

எதிராக

கந்தையா மாணிக்கம் புலோலி தெற்கு

—பிரதிவாதி

மேற்குறித்த இலக்கங்கொண்ட மரண சாதனச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக, மேற்குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1985-ம் ஆண்டு தை மாதம் 18-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1984-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

பதிவாளர்

வரைவு

வ. கு. கணபதிப்பிள்ளை

மனுதாரின் சட்டத்தரணி

1032

## வகுப்புக்கள்

22-12-84 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறும். வரமுடியாத மாணவர்சட்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்படும் சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். 1036

## தவறிவிட்டது

85 ஸ்ரீ 2368 கொண்டா மோட்ட சயிக்கிளினது புத்தகம் 19-12-84 ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். உரிமையாளர். பாபா அரிசி ஆலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 1042

அம்பலவாணர் சுப்பிரமணியம் 37/2, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணம் என்ற முகவரியைக் கொண்ட எனது அடையாள அட்டையை பெரியகடையில் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும் அல்லது நேரில்தந்து உதவவும். 1038

## இவர்கள் விடுதலை

(பண்டத்தரிப்பு)

கடந்த 12-ம் திகதியன்று ஆயுதப் படையினரின் தேடுதலின் போது பண்ணுகத்தில் வைத்து கைது செய்யப்பட்ட பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை மலேரியா இரத்த பரிசோதகர் சின்னையா தயாபரசிவம் பண்ணுகத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் எஸ். மாணிக்கவாசகரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம்

### சோலைவரி 4ம் கந்தாயம்—1984

1984ம் ஆண்டு 4ம் கந்தாயத்திற்கான சோலைவரிப்பணம் 31-12-1984ம் திகதி திங்கட்கிழமைபிற்பகல் 12-30மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின்படி வெலியாத்துப்பணம்அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள், குடியிருப்புக்காணிகள் | -15% |
| இவையல்லாத காணிகள் | -20% |

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற்கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பபடல் வேண்டும். அப்படியாகஅனுப்பப்படும் போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-12-1984. 1045

## குடியியல் நடைமுறைச் சட்டக் கோவையின் (இலங்கை சட்டவாக்கம் 4ம் புத்தகம்101ம் அத்தியாயம்) 16ம் பிரிவின்படி அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

1. வழக்கு இலக்கம்; நம்பிக்கை சொத்து/105
2. கட்சிக்காரர்களின் பெயர்கள்
   1. துரைசிங்கம் கைம்பெண் சத்தியதேவி,
   2. சதாசிவம் சண்முகநாதன், இருவரும் நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
   3. கந்தசாமி கிருபாகரன், நீர்வேலிமத்தி, நீர்வேலி. வாய்க்கால்தரவை மூத்த நயினர் பிள்ளையார் கோவிலில் வந்தனை வழிபாட்டுக்காரரின் திருப்பணிச் சபையின்சார்பில் வழக்காளிகள்.

   எதிராக

   1. ஆபதோத்தாரணக்குருக்கள் சோமசுந்தரக் குருக்கள், நீர்வேலி வடக்கு, நீர்வேலி, தற்போது மலேசியா, அவரின்சட்ட பூர்வமான அற்ரோனித் தத்துவக்காரன் ஆபதோத்தாரணக்குருக்கள் சுப்பிரமணியசர்மா. நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
   2. ஆபதோத்தாரணக்குருக்கள் சுப்பிரமணியசர்மா,
   3. ஆபதோத்தாரணக்குருக்கள் சந்திரசேகரக் குருக்கள், இருவரும் நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

   எதிராளிகள்.
3. வழக்குத் தொடரப்பட்ட திகதி; 12-11-1984.
4. வழக்குத் தொடரப்பட்டதின் நோக்கம்;- 1984ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம்திகதி சொல்லப்பட்ட கோவிலின் வந்தனை வழிபாட்டுக் குரியவர்களின் கூட்டம் கோவிலின் மண்டபத்தில் நடைபெற்றபோது நிறைவேறியதீர்மானத்துக்கமைய திருப்பணிச்சபை பொதுமக்களிடம் பணம் சேகரித்து சொல்லப்பட்ட வாய்க்கால்தரவை மூத்த நயினர் பிள்ளையார் கோவிலின் மிகுதி திருப்பணி வேலைகளை செய்வதற்கு இந் நீதிமன்றத்திடம் மனுச்செய்து உத்தரவு பெறும்படி திருப்பணிச் சபைக்கு அதிகாரம்அளித்தமையால் குறித்த திருப்பணிச் சபை குறித்த கோவிலின் மிகுதி திருப்பணி வேலைகளைச் செய்வதை எதிராளிகள், அவர்களின் முகவர்கள், வேலையாட்கள், ஏவலாளர்கள் எவரேனும் [illegible] திலும் தடைசெய்யக்கூடாதென்று நிரந்தர தடைக் கட்டளையையும் வழக்குச் செலவையும் நீதிமன்றத்திடம் பெறுவதற்காகவழக்காளிகளால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
5. வழக்காளிகளுக்கு வழக்கைத் தாக்கல் செய்யும் உரித்து:- பிராதுடன் ''வ 1'' என அடையாள மிடப்பட்டு இணைக்கப்பட்ட திருப்பணிச்சபையின் 27-10-1984ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் பிரேரணையில் வழக்காளிகள் மூவருக்கும் திருப்பணிச் சபையின் சார்பாக இவ் வழக்கைத் தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
6. இப்பிரசுரத்தின் நோக்கம்; குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 16ம் பிரிவின் நிமித்தம் சொல்லப்பட்ட திருப்பணிச்சபை மறு அங்கத்தவர்களுக்கு பகிரங்க அறிவித்தல் கொடுப்பதற்காக.
7. வழக்காளிகளின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயரும் விலாசமும்: ச. கிருஸ்ணகுமார், சட்டத்தரணி, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.

1984ம் ஆண்டு மார்கழிமாதம் 5ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்,
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்.

(1020)

## அறிவித்தல்

(1) தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 5000க்கு மேலான வெற்று சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். 27-12-84ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

(2) தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் தனது 1985ம் ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறி சேவை ரெண்டர் மூலம் கோரப்படுகின்றது. விண்ணப்பப் பத்திரம் பிரதம சங்கத்தில் பெற்று பூர்த்திசெய்து 27-12-84ந் திகதிக்கு முன்பு பொதுமுகாமையாளரிடம் சேரல்வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 1000/- செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம், 14-12-84 1040

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1984ம் ஆண்டு 4ம் கந்தாயத்துக்குரிய ஆதனவரியை 31-12-84ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பு இக் காரியாலயத்திற் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத் திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன் வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15 %) ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20% கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக் காணிகளைச் சுவீகரிப்பதற்குச் சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே, காணி உரிமையாளர்கள் உடனடியாகச்சபையுடன் தொடர்புகொள்ளவும்.

1985ம் ஆண்டுக்கான ஆதனவரியை முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு 10 % கழிவு வழங்கப்படும என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்

த. நவரத்தினராசா
செயலாளர்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
17-12-84. 1039

எமது வாடிக்கையாளர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
உளம் கனிந்த
நத்தார்புதுவருட வாழ்த்துக்கள்

எமது ஸ்தாபனம்
நத்தார்–புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு
இம்மாதம்
24–ம், 25–ம், 26–ம், 29–ம், 30–ம் 31–ம்
திகதிகளிலும் தை மாத 1–ம் திகதியிலும்
மூடப்பட்டிருக்கும்.

TFC
த பினன்ஸ் கம்பனி
லிமிட்டட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

UNIQUE COMMUNICATION SERVICE
யுனிக்
கொமுயுனிக்கேசன்
சேர்விஸ்



நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாதமா காந்தி ரோட்.
(சலுசலவுக்கு அனமையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ.1417, 54 யோர்க வீதி, கொழும்பு :
ரெலெகஸ.- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூட்டணி முன்னுள் எம். பி. க்களுக்கு பென்சன் வழங்கக் கூடாது!"

## தமிழ் உத்தியோகத்தர்கள் சபையில் குண்டுகளை வைக்கலாம் என்கிறுர் பொல்காவலை எம். பி.

(கொழும்பு)

''தமிழர் விடுதலைக் கூட்டணி எம்பிக்களுக்கு பென்சன் வழங்கக்கூடாது அவர்கள். மறைமுகமாக பயங்கரவாதிகளுக்கு உதவுகிறுர்கள்''

இவ்வாறு பொல்காவலை எம் பி திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டுப் பிரிவினைக்கு எதிராக நாம் இங்குசட்டம் இயற்றியுள்ளோம். ஆனுல் 16 கூட்டணி எம். பிக்களும் விசுவாசம் தெரிவிக்காததால் அவர்களுக்கு பென்சன் வழங்கக் கூடாது என்று அவர் கூறினுர்.

''பாராளுமன்றஅலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடுமீதான விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

''பாராளுமன்றத்தில் தமிழ் உத்தியோகத்தர்கள் 50 பேர் வரை இருக்கிறுர்கள். இவர்களை நம்பக் கூடாது. இவர்கள் நாம் இருக்கும் இக்கட்டிடத்தினுள் குண்டுகளை வைக்கலாம்.

''நான் யாருக்கும் பயந்தவனல்ல. நாட்டு நிலைமையைத்தான் கூறுகிறேன். தமிழ் உத்தியோகத்தர்களை இங்கிருந்து இடமாற்ற வேண்டும். மொழிபெயர்ப்புக்கு உதவுவதற்காக சிங்கள பற்றுக்கொண்ட ஒருவரை வைத்துக்கொண்டு ஏனையோரை இடம் மாற்றவேண்டும். (இ)

---

சாவகச்சேரியில்

# உணவுக் கட்டுப்பாட்டு பத்திரங்கள் அபகரிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து சுமார் 1500 உணவுக்கட்டுப்பாட்டுப்பத்திரங்கள் அபகரித்துச்செல்லப்பட்டுள்ளன.

இப்பத்திரங்கள் நிரப்பப்படாத வெறுமையானவையாகும் என்று கூறப்பட்டது.

நேற்று முன்தினமிரவு 11-45 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது. ஆயுதந்தரித்த சுமார் 10 இளைஞர்கள் இந்த உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு வந்துள்ளனர். அவர்கள் அங்கு காவலாளியைக் கட்டிப் போட்டபின்னர் பின்புறமாக உதவி அரச அதிபர் இல்லத்துக்குச் சென்று அவரை வெளியேவரும்படி சத்தமிட்டனராம் ஆனுல் அவர்கொழும்பு சென்றுள்ளதால் அங்குஎவரும் இருக்கவில்லை.

பின்னர் மீண்டும் அலுவலகம்வந்து ஜன்னல் ஒன்றை உடைத்து உள்ளே அக்கூட்டம் புகுந்துள்ளது. தொடர்ந்து அங்கிருந்த சுமார் 1500 உணவுக்கட்டுப்பாட்டுப் படிவங்களை அபகரித்துக் கொண்டு சுமார் 12-30 மணியளவில் அவ்வாயுதக்கும்பல் தலைமறைவாகியதாகக் கூறப்பட்டது.

காவலாளியின் கட்டுக்கள் மறுநாள் காலைவேறு அலுவலர்ஒருவரால் அவிழ்த்துவிடப்பட்டது. (கி)

---

## 118 வயது மூதாட்டி காலமானுர்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திருமதி தனுஷ்கோடி வேலாசிப்பிள்ளை என்னும் மூதாட்டி தனது 118 வது வயதில் காலமாகியுள்ளார்.

இவருக்கு 5 பிள்ளைகளும் 50-க்கு மேற்பட்ட பேரப், பூட்ட, கொடபாட்டபிள்ளைகளும் உள்ளனர்.

இவரின் கணவர் 102 வயதில் காலமாகியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

''உயிரையும் துச்சமென மதித்து யாழ். ஆஸ்பத்திரியில் 24 மணி நேரமும் கடமைபுரியும்

# ஏழைத் தொழிலாளரின் சம்பளமும் கொள்ளையா?''

(யாழ்ப்பாணம்)

''தற்போதுள்ள மிகவும் அபாயகரமானசூழ்நிலைகளுக்கு மத்தியில் தமது உயிரையும் உணவையும் பொருட்படுத்தாது, அன்ருடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வன்முறைகளினுல் பாதிக்கப்படுகின்ற மக்களின் உயிர்களை பாதுகாக்கும் உணர்சியோடும், தமது குடும்பங்களை வாழவைக்கும் ஏழ்மை பிரச்னைகளுக்கு மத்தியிலும், இப்போதுள்ள சட்ட அமுலாக்கல் பிரச்னைகளின் மத்தியிலும், இருபத்திநான்கு மணிநேரமும் யாழ். ஆஸ்பத்திரியில் சேவை செய்து கொண்டிருக்கும் ஏழைத தொழிலாளர்களின் சம்பளப் பணத்தை கொள்ளையிடுபவர்களை தொழிலாளர் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேம்''

யாழ். வைத்தியசாலை தொழிலாளர் நலன்காக்கும் 'அமைப்புக்குழு' விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது;

வைத்தியசாலை ஊழியர்களின் குடும்பநிலையைக் கவனத்தில் கொண்டும், அவர்களின் அத்தியாவசிய சேவையை மனதில் கொண்டும், கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தை சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு தொழிலாள வர்க்கத்தின் சார்பில் வேண்டுகோள்விடுப்பதாகவும் அவ்வறிக்கையில் 'அமைப்புக்குழு' கேட்டுள்ளது. (மா)

---

## ஓய்வூதியம் பெறுவோர் கவனிக்க...

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதத்துக்கான ஓய்வூதியம், பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட இடங்களில் வசிப்போருக்கு வழங்கப்படவுள்ளது.

இம்மாதம் 24ந் திகதி: வட்டுக்கோட்டை, காரைநகர். அளவெட்டி, புங்குடுதீவு, வசாவிளான். நயினுதீவு, அனலைதீவு. 26ந் திகதி: பண்டத்தரிப்பு, நெடுந்தீவு, கொடிகாமம், மானிப்பாய், கைதடி, உரும்பராய், வேலணை. 27ந் திகதி: யாழ்ப்பாணம், கொக்குவில், கோப்பாய், அச்சுவேலி, சுழிபுரம். 28ந்திகதி: யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வண்ணுர்பண்ணை, சங்கானை.

ஜனவரி 1ந் திகதி; ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, தெல்லிப்பளை, பருத்தித்துறை, சுன்னுகம், வல்வெட்டித்துறை, கரவெட்டி.

கச்சேரி இலங்கை வங்கியில் கொடுக்கப்படும் ஓய்வூதியம் இம் மாதம் 22ந் திகதி சனிக்கிழமை குருநகர் இலங்கை வங்கியில் கொடுக்கப்படும், ஓய்வூதியம் பெறுவோர் அன்றைய தினம் தவருமல் சென்று பெற்றுக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர், (மா)

---

## ஜீப் கடத்தப்பட்டது

(வவனியா)

வவனியா கல்வித்திணைக்களத்திற்கு சொந்தமான ஜீப் வண்டி இனம்தெரியாத வாலிபர்களால் கடத்தப்பட்டுள்ளது

13ம் திகதி காலை இச்சம்பவம் ஓமந்தைக்கு அருகாமையில் நடந்துள்ளது.

க பொ த பரீட்சை வினுத்தாள்கள் எடுத்து செல்லும் போது ஜீப்வண்டி கடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

---

## தடுப்பு முகாமில் இரு இளைஞர்கள்

(வவனியா)

வவனியா பத்தினியார் மகிழங்குளத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் ஈரற்பெரியகுளம் இராணுவ முகாமில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வவனியா மாவட்ட இணைப்பதிகாரி இத்தகவலை அரச அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

செல்வேந்திரன், தங்கராஜா ஆகிய இரு இளைஞர்களுமே கைதுசெய்யப்பட்டவர்கள் ஆவார்கள்.

---

# சுழிபுரம் படுகொலைக்கு கண்டனப் பிரசுரங்கள்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் ஆறு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஆறு இளைஞர்களின் படங்களுடன் தமிழீழவிடுதலைப் புலிகள் நேற்று துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

மக்கள் வேட்டையா? மனித விடுதலையா? என்ற தலைப்பில் இத்துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்தமாதம் 25-ம் தேதி இரவு 8 மணியளவில் இயக்க சுவரொட்டிகளை ஒட்டச் சென்று கொண்டிருந்த வேளையில் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும் இம்மாதம் 9-ம் தேதி சுழிபுரத்திலுள்ள ஒதுக்குப்புறமான இடமொன்றிலுள்ள கிடங்கிலிருந்து சட [4-ம் பக்கம் 1ம் கலம் பார்க்க]

---


**ராணி** (யாழ்ப்பாணம்)

10-30, 2-00,

FUTURE WOMAN

(கண்டிப்பாக (வயது வந்தவர்களுக்கு)

**வின்ஸர்** (யாழ்)

10-30 மட்டும்

ரஜனிகாந்த்-ராதா-சரிதா சில்க்-தேங்காய்-மனேரமா

**சிவப்பு சூரியன்**

(ஈஸ்ட்மன் கலர்(

**ஸ்ரீதர்** (யாழ். நகர்

தினசரி 10-30, 2-30,

கமலஹாசன், ஸ்ரீதேவி

**தாயில்லாமல் நானில்லை**

(ஈஸ்ட்மன் கலர்)

**றீகல் மினி**

10-15, 1-30

மோகன்... நளினி... ஜெய்சங்கர்.. சத்யராஜ்.. நடிக்கும்

மணிவண்ணனின்

**24 மணிநேரம்**

இன்று முதல்

**ஹரன்** (யாழ். நகர்)

தினசரி 10-30, 2-00,

சந்திரசேகர், சுகாசினி ராஜீவ்

**பாலைவனச்சோலை**

புதிய பிரதி

(ஈஸ்மன் கலர்)

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

**லிடோ** சினிமா

தினசரி 10-30, 2-00

MISSION BATANGAS

(War Film - Action packed)

**வெலிங்டன்**

(யாழ். நகர்)

10-30, 2-00, P. M.

ஜெய்சங்கர்

**துணிவே துணை**


---

# பிந்ரன்வாலே உறவினரை நாடு கடத்துமாறு உத்தரவு!

லண்டன், டிச 21

பஞ்சாப் பொற்கோயிலுக்குள் வைத்து இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சீக்கிய தீவிரவாதத் தலைவர் பிந்ரன் வாலேயின் உறவினர் திரு. ஜஸ்பிஸ்சிங்கை டுபாய்க்கு நாடு கடத்துமாறு பிரிட்டிஷ் உள்துறை செயலாளர் குடியேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரிட்டனுக்கான இந்தியாவின் துணைகமிஷனர் பிரிட்டன் உள்துறை செயலாளரை சந்தித்ததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த முடிவை எதிர்த்து பிரிட்டிஷ் உயர் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந்த உத்தரவை நிறைவேற்ற முடியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

திரு ஜ பிஸ்சிங் அடைக்கலம் கோரி டுபாயிலிருந்து பிரிட்டன் சென்றிருந்தார். (வெ)

---

## முதலமைச்சர் எம். ஜி. ஆரின்

# மாற்று சிறுநீரகம் நன்ருக இயங்குகிறது

சென்னை டிச 21

நியூயோர்க் புறூக்ளின்மருத்துவ மனையில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்குள்ளான தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி, ராமச்சந்திரன் இன்னும் ஒரு சில வாரங்களில் அஸ்பத்திரியிலிருந்து வெளியேறுவாரென்று இவருக்கு சகிச்சையளித்துவரும் டாக்டர்கள்தெரிவித்தனர்.

முதலமைச்சருக்கு பொருத்தப்பட்டுள்ள மாற்று சிறு நீரகம் நன்ருகச் செயல்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அவரது உடல் நிலையில் சிக்கல் எதுவும் இல்லையெனவும் ... பட்டது.

---


யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985

**மீட்டல் வகுப்புகள்**

3-12-84ல் ஆரம்பமாகும் என்று பிற்போடப்பட்ட வகுப்புகள் 2-1 85ல் ஆரம்பமாகின்றன.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்,

தொலைபேசி எண்; 22617

376, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(1043)

**Home Finance Ltd.**

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை

நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

- ★ சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- ★ T. V. மேசை,
- ★ தண்ணீர்த் தாங்கி,
- ★ WASH BASIN,
- ★ TEAPOYS, ★ CENTRE TABLE,
- ★ VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்,

**TRADE CENTRE,**

**ஹோம் பினன்ஸ் லிமிட்.,**

155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வாழ்வில் சிரிப்புக் குலுங்குகின்றது என்கிறது செழித்த செந்தாமரை. துன்பமும் அழுகையும்தான் வாழ்க்கையில் நிறைந்திருக்கிறது என்கிறது எரியும் மெழுகுவர்த்தி.

— கவி இக்பால்

# நமது நோக்கு

## பெறுமவற்றுள் மிகப்பெரிது

'மாநாட்டை நடத்துங்கள்; நிறுத்துங்கள்; மீண்டும் அதில் தொடருங்கள்; எங்களுக்கு வேண்டியது உயிர்ப்பிச்சை; எங்களின் உயிரல்ல; உயிருக்குயிரான எங்கள் மக்கள்.'

இந்த குரலே இன்று யாழ்ப்பாணத்தில் ஒலிக்கும் அழுகுரல்; எங்கள் நேற்றைய பத்திரிகையில் மிகப் பிரபலமாகக் குறிப்பிட்ட செய்தி. இதனை யாழ்ப்பாணச் செயலகத்தில் தினந்தோறும் காணப்படும் அமங்கலக் காட்சி என்று வர்ணிக்கிறது.

இதனை அகற்றுவதே இன்று இங்கு வாழும் மக்களின் முதற்தேவை. அன்று கொழும்பிலிருந்து தப்பிஓடி கப்பலில் வந்திறங்கினோம்; இன்று இங்கிருந்து எமது அருந்தவப் புதல்வர்கள் கொழும்புக்கு கப்பலில் கொண்டு செல்லப்பட்டனர்.

அன்று குண்டர்கள் நடத்திய கோரச்செயலின் அழிவும், அவமானமும் உலகின் பத்திரிகைகளில் உருக்கமாக எழுதிய மை காயமுன், யாழ்ப்பாணம் ஒரு மைய வீடானதற்கு அரசின் ராணுவமும் கர்த்தாவென்றால் இதற்குத் தீர்வு காண்பது யார். இதுவே அன்னையரின் பிரலாபம். இங்குள்ள இளைஞர்கள் எவரும் விடுதலை வேட்கையற்றவரா?

ராணுவ ஆட்சி எமக்குப் புதிதல்ல நாம் இழந்தவை உயிர் உடைமை கொஞ்ச நஞ்சமல்ல. இந்த நிலையில் எமக்கு ஆதரவளிப்பதும் நாம் பெறுமவற்றுள் மிகப் பெரிதுமான எம் பிள்ளைகளை உயிருடன் தாருங்கள் என்று யாழ்ப்பாணத்துத் தாய்க்குலம் கதறுவதை அரசு பரவாய்பண்ணமலிருக்கமுடியாது. அன்னையர் கண்ணீர் பெய்யெனப் பெய்யும் மழை. ஆட்சிக்கெதிராகச் சூழ்ச்சி செய்யும் சதியில் தொடர்புடைய எவரையும் அன்னையின் அழுகுரலில் உருகிக் கையளிக்குமாறு நாம் சொல்லவில்லை.

ஆனால் இப்பகுதிகளில் குறிப்பாக அண்மையில் யாழ் நகரில் நடந்த இளைஞர் வேட்டையைக் கண்ணுரக் கண்டவர்கள் வருங்காலத் தமிழ் சமூகத்தை ஒழித்துக் கட்டும் சாதனைகளில் ஒரு அம்சமா இது? என அஞ்சுகின்றனர்.

ஆயிரக்கணக்கில் பிடித்து நூற்றுக்குக் குறையவே இன்னும் விசாரணையில் இருப்பதானால் இந்த வேட்டையும், அதன் சூழ்நிலையும் இப்பகுதி மக்களுக்கு எவ்வாறு அமைதியளிக்கும்? அடிமைச் சமூகத்தின் மிக இழிந்தநிலை இது.

விசாரணைக்காகக் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டோர் பட்டியல் எங்கள் பத்திரிகையில் தொடர்ந்து வருகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள எந்தக் கிராமமும் தள்ளுபடியில்லைப் போல் தெரிகிறது.

இவர்கள் 'பயங்கரவாதிகள்' என்றாலென்ன, அல்லது 'தமிழர் விடுதலை இயக்கத்தின் அனுதாபிகள்' என்றால் என்ன, எவ்வாறு பட்டம் சூட்டியபோதும் இந்த நாட்டில் பிறந்து வளர்ந்து வாழவிருக்கும் செல்வங்கள் என்பதை மறுக்க முடியாது.

தமிழர் துன்பங்களுக்கு ஒரு விடிவுகாணும் வாய்ப்பு நெருங்குவதால், கைது செய்து வைத்திருக்கும் தமிழ் இளைஞர்கள் வீடு திரும்ப உடன் வழிசெய்வது அரசின் உடனடிக கடமை.

## சுளிபுரம்——

[3ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி

லங்களை மீட்டதாகவும் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதட்டளவில் ஒற்றுமையைப் ற்றிபேசி வேஷம் போடுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் விடுதலைப் பயணத்தை நாசப்படுத்தும் இவ்வாறான செயல்களுக்கு மௌனம் சாதிப்பனூடாக மன்னிப்பளிக்க நாம தயரில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

படங்களின் கீழ் சி சிவகுமாரன்[சிவா] மூளாய் த புவிந்திரன் (புவி) சுளிபுரம் க. சிவானந்தன் [சின்னசிவா] மூளாய் வி தேவநாதன் (தேவன்) சுளிபுரம், சி. சிவராசா [சிவம்] சுளிபுரம், க யோகீஸ்வரன் (ஈஸ்) சுளிபுரம் என்றும் எழுதப்பட்டுள்ளது (மா)

## புத்தாண்டில்...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ வீ கே. சிவஞானத்திற்குக் கிடைத்துள்ள 'ரெலக்ஸில்' இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களிடமிருந்து இதற்கு எதிர்பார்த்த நிதி இன்னும் கிடைக்கவில்லையென்றும், ஆதலால் தாமதியாது நிதி உதவி வழங்குமாறு ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தமிழ்நாடு அரசியல்வாதி காலமானர்

[திருநெல்வேலி]

இந்திய உழவர் - உழைப்பாளர் கட்சித் தலைவர் திரு நாராயணசாமி நாயுடு நேற்று அதிகாலை திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டியில் மாரடைப்பினுல் காலமானர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

## 2000...

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

முனையில் எடுக்கப்பட்டுத் தீவைக்கப்பட்டுள்ளன

இனந்தெரியாத ஆறு பேர் கொண்ட நபர்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டிருந்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நிரப்பப்படாத சுமார் 2 ஆயிரம் படிவங்களும், விசேஷ சேவையாளரின் அலுவலகத்தில் நிரப்பப்பட்ட சுமார் 2 ஆயிரம் படிவங்களும் தீவைக்கப்பட்டன,

கடந்த வாரம் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து சுமார் 5 ஆயிரம் அதே படிவங்கள் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது இப்பத்திரங்கள் வீட்டுக் காரர்களினால் நிரப்பப்படுவதற்காக உத்தியோகத்தர்களால் ஒவ்வொரு வீடுகள் தோறும் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த உணவுக் கட்டுப்பாட்டுப் படிவத்தில் பின்வரும் விபரங்கள் கேடகப்பட்டுள்ளன

ஒரு வீட்டில் இருப்பவர்களின் தொகை, வயது, தொழில், குடியிருப்பாளர் கையொப்பம், 18 வயதுக்கு மேற்பட்டவர் கையொப்பம்.

## 500 அன்னையர்போர்க்கொடி..

(1ம் பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

னர். ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்த பெண்களின் முகத்தில் சோகம்படர்ந்திருந்தது.

அன்னையர் ஊர்வலம் கச்சேரி அலுவலக வாயிலை அடைந்ததும், 'உத்தியோகத்தர்களே ராஜினுமா செய்யுங்கள்' என்று கோஷமிட்டுக் கொண்டு அலுவலகத்துக்குள் புகுந்தார்கள். சிலபெண்கள் ஒப்பாரி வைத்து அழுதார்கள் அப்பொழுது அரச அதிபரின் பணியகம் பூட்டப்பட்டிருந்தது. உணர்ச்சி வசப்பட்ட பெண்கள் சிலர் பணியகத்தின் கதவைத் தட்டிப் பார்த்த பொழுது அங்கு எவரும் இருக்கவில்லை.

சில பெண்கள் சில பணியகங்களுக்குள் புகுந்து அங்கு கடமையிலிருந்த உத்தியோகத்தர்களிடம் திருநெல்வேலியில் நடைபெற்றது போன்று நாளை உங்கள் வீட்டிலும் நடக்கலாம்'' என்று கதறினார்கள், கண்ணீர் விட்டழுதார்கள் உத்தியோகத்தர்கள் எதுவும் பேசாது மௌனமாக நின்றார்கள்.

அன்னையர்கள் எழுப்பிய அவலக்குரலாலும், ஆக்ரோஷமான பேச்சுக்களாலும் உத்தியோகத்தர்கள் தொடர்ந்து கடமையாற்ற முடியாத சூழ் நிலை ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் அலுவலகத்தில் கடமையிலிருந்த இரு பொறுப்பதிகாரிகள் அன்னையரை நோக்கி, 'அமைதியாயிருங்கள்' அரசாங்க அதிபர் வந்து கொண்டிருக்கிறார் உங்கள் பிரச்னையைச் செல்லுங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்தனர்.

### அரச அதிபர் வந்தார்

அன்னையர்கள் மௌனமாக அலுவலக வாயிலில் குழுமி நின்றார்கள்.

சுமார் ஒரு மணியளவில் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் அலுவலகத்துக்கு வந்ததும், அன்னையர்கள் இருந்தஇடம் நோக்கிச் சென்றார்

அன்னையர் முன்னணியினர் மகஜர் ஒன்றைக் கையளித்து, தங்கள் கண்ணீர் கதைகளை ஆறுதலாக அமைதியாக, எடுத்துச்சொன்னார்கள்.

### பெண் மயங்கி வீழ்ந்தார்

இச்சந்தர்ப்பத்தில் கவலையுற்றிருந்த பெண் ஒருவர் மயங்கி வீழ்ந்துவிட்டார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் அன்னையரை நோக்கி; உங்கள் முயற்சிதான், எனக்குத் தூண்டுகோலாக இருந்தது என்றும், பொதுமக்களின் வாழ்க்கையைப் பூர்த்தி செய்வதற்கு மத்தியில், உங்கள் பிரச்னைக்கும் முகம் கொடுத்து வருகின்றேன் என்றும் சொன்னார்

வல்வெட்டித் துறையில் கைது செய்யப்பட்டவர்களில் இன்னமும் 12 இளைஞர்கள் தான் காலி பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களும் விசாரணை முடிந்ததும் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் உறுதி அளித்தார்

இராணுவத்தினர் சோதனை நடாத்தும்போது வீடுகளில் நகைகள் கொள்ளையோ, தகாத செயலோ இடம்பெற்றால் ஆதார பூர்வமாக எனக்குச் சமர்ப்பியுங்கள் உயர்அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்பேன்'' என்றும் அரசாங்க அதிபர் உறுதி அளித்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற இளம்பெண் பலாத்காரச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வீடுகள் சோதனையிடும் பொழுது பொறுப்புவாய்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களும் உடன் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அன்னையர் வேண்டுகோள் விடுத்தனர்.

சிவில் நிர்வாகம் நடத்துவதுதான் எனது கடமை என்று குறிப்பிட்ட அரச அதிபர் என்னால் முடிந்தளவு அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்கின்றேன் என்றார். (மா)

## சர்வகட்சி...

[1ம் பக்க 4ம் கலத்தொடர்ச்சி)

இருக்கும். இது பற்றி உயர் நீதிமன்றமும் ஜனதிபதியும் தீர்மானிப்பர். ஏதாவது ஒரு விசேட தேவைக்காக ஜனதிபதி விரும்பினுல் மாநாட்டை மீண்டும் கூட்டும் முடிவை எடுக்கலாம்.

''சர்வகட்சி மாநாடு தொடர்பாக இருந்து வந்த தணிக்கை நீக்கப்பட்டுள்ளது. ஆயினும் பத்திரிகைகள் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினம் பொன்னம்மா

முகமாலை எழுதுமட்டுவாள் திருமதி நவரத்தினம் பொன்னம்மா 20-12-84 அன்று காலமானர் இவர் நவரத்தினத்தின் அன்பு மனைவியும், கனகசபையின் சகோதரியும், செல்லம்மா, செல்வத்துரை, கனகசபை, புண்ணியமூர்த்தி, பாலகிருஷ்ணன், பாலலட்சுமி, பாலச்சந்திரன், சிவபாலன் ஆகியோரின் தாயாரும், சிவப்பிரகாசம், இந்திராணி, கமலாதேவி, பொன்னம்மா, சூரியகுமாரி, வசந்தேஸ்வரி ஆகியோரது அன்பு மாமியுமாவார். அன்னரது இறுதிக்கிரியைகள் 21-12-1984 அன்று முகமாலையில் நடைபெற்றது.

கணவன், பிள்ளைகள்.

முகமாலை, எழுதுமட்டுவாள்.

1050

## மரண அறிவித்தல்

### திருமதி லோகாம்பிகை கனகேஸ்

நல்லூரைச் சேர்ந்த திருமதி லோகாம்பிகை கனகேஸ் 10-12-84 ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி இளையப்பா அவர்களின் மகளும், சதீஷ், உதேஷ் றமேஷ், முகேஷ் அவர்களின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கேதீஸ்வரநாதன், தர்மலிங்கம், திருமதி ஆறுமுகம் தப்பி, காலஞ்சென்ற மகாதேவா அவர்களின் சகோதரியும், காலஞ்சென்ற திரு. கந்தையா, திருமதி கந்தையா அவர்களின் மருமகளும், மாசிலாமணி, அரசலிங்கம், திருமதி கமலா, ஸ்ரீநிவாசன் அவர்களின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் 44/1 சின்சுபா ரோட் வெள்ளவத்தையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தெகிவளை மயானத்தில் 11-12-84 ல் தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கமலா ஆறுமுகம்தப்பி.

274, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 1057

## மரண அறிவித்தல்

### K K. விஸ்வலிங்கம்

(முன்னைநாள் J P) காரைநகர்.

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னைநாள் காரைநகர் கிராமசபைத் தலைவரும், முன்னைநாள் வலிகாமம் வடக்கு பஸ் கொம்பனி இயக்குநரும், திருகோணமலை - மூதூர் படகுச் சேவை, ''லிங்கம்ஸ் ஸ்ரோஸ்'' 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், ''லிங்கம் அரிசியாலை'' துறைமுகம், காரைநகர் ஆகியவற்றின் உரிமையாளரும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் உடையவரும், பிரபல வர்த்தகருமான திரு. K K. விஸ்வலிங்கம் அவர்கள் 19-12-84ம் திகதி இறைவனடி எய்தினர். அன்னாரின் பூதவுடல் 20-12-84ம் திகதி வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று காரைநகர் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தவிர்க்க முடியாத காரணத்தினல் உடன் அறிவிக்கப்படவில்லை.

தகவல்: மக்கள், பெருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1048

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org